**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.100/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 19.02.2026 | | | |

## 2ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.1 உயிலில் கண்ட படி ஜெர்மனின் இறப்பிற்கு பின் வாதியே அவரது இறுதி சடங்குகளையும், 40 ம் நாள் காரியத்தையும் முன்னின்று செய்தார் என்றால் சரியல்ல. OS.2/2021-ல் பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஒரு இடைக்கால ஏற்பாடு என்பதாலும் அதில் இருதயத்தின் இரண்டு திருமணமான பெண் மக்கள் கையெழுத்து செய்யவில்லை என்பதாலும், எனவே , பி.வா.சா.ஆ.4 ஆவணம் இந்திய வாரிசுரிமை சட்டத்திற்கு விரோதமானது என்பதாலும், பி.வா.சா.ஆ.4 ஆவணம் பதியப்படவில்லை என்பதாலும் , இருதயத்தின் இரண்டு திருமணமான பெண் மக்களும் தங்கள் பாத்தியத்தை விட்டு கொடுத்ததற்கான யாதொரு ஆவணத்தையும் எழுதிக் கொடுக்கவில்லை என்பதாலும், மேற்படி இரண்டு நபர்களும் சொத்தின் பாத்திய உரிமையில் இருந்து நீங்கறவு (Ouster) செய்யப்பட்டார்கள் என்பதற்கு யாதொரு ஆவணமம் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், வா.சா.ஆ.1-ன் உயிலின் சாத்தியக்கூறுகள் வெகுகாலமாக நிலவி வந்ததால் உங்களை தவிர ஜெர்மனின் இதர வாரிசுகள் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. OS.2/2021-ல் பி.வா.சா.ஆ.4 ஆவணம் மற்றும் 1979 ஆம் வருடத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஜெர்மனின் சொத்துரிமை வரையறை செய்யப்பட்டுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.8 வரையிலான வங்கி மற்றும் தபால் அலுவலக கணக்குகளில் உள்ள தொகைகள் ஜெர்மனுக்கு சேர வேண்டியது என்றால் சரிதான்.1979-ல் அந்தோணி சம்மனசம்மாள் எழுதிக் கொடுத்த சொத்தில் ஜெர்மன் வீடு கட்டியுள்ளார் என்றால் அதே ஓட்டு வீட்டை பராமரித்துள்ளார். அந்த வீட்டிற்கான வீட்டு வரி ரசீது தான் வா.சா.ஆ.8 ஆகும். 2004 ஆம் ஆண்டு உங்கள் ஊரில் நடந்த பஞ்சாயத்தில் ஏற்பட்ட வர்த்தமான ஒப்பந்தத்தின் ஒளி நகலை அதில் கையொப்பம் செய்த நபர்களிடம்

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வர்த்தமான ஒப்பந்தத்தின் மற்றொரு ஒளி நகல் இது தான் என்றால் சரிதான். இந்த வர்த்தமான ஒப்பந்தம் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வர்த்தமான ஒப்பந்தத்தில் ஜெர்மன், சம்மனசு, ஆரோக்கியம், இருதயசாமி மற்றும் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். ஜெர்மன் இறந்த பிறகு ஜெர்மன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பாக்கிகளை ஜெரால்டு தான் கட்டி தீர்த்து இரசீதை வா.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor